செ.வெ.எண்-204 நாள்-08.10.2026

**தென்காசி மாவட்டம்**

**காலியாக உள்ள வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் பணியிடங்கள் நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது – மாவட்ட ஆட்சியர் திரு. ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள்**

---

தென்காசி மாவட்டம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் வட்டார இயக்க மேலாண்மை அலுவலகத்தில் காலியாக உள்ள வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் பணியிடங்கள் (ஆலங்குளம் -1. கடையம்-1, கீழப்பாவூர் -1 மற்றும் செங்கோட்டை-1) வட்டார அளவிலான கூட்டமைப்புகளால் வழங்கப்படும் தகுதியான நபர்கள் மூலம் வெளியாதார முறையில் நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

- விண்ணப்பதாரர்கள் இளங்கலை பட்டம் ஏதாவது ஒரு பிரிவில் பெற்றிருக்க வேண்டும். மூன்று மாத கணினி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் ( MS Office or computer science or computer applications) அல்லது கணினியில் பட்டபடிப்பு பெற்றிருக்க வேண்டும்
- 35 வயதிற்கு மிகாமல் இருந்தல் வேண்டும்
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு / சுய உதவிக்குழுவில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் அனுபவம் பெற்றவராக இருத்திருக்க வேண்டும்
- தென்காசி மாவட்டத்திற்கு உட்பட்ட அதே குடியிருப்பு பகுதியில் வசிப்பவராக இருக்க வேண்டும்
- இரு சக்கர வாகனம் ஓட்ட தெரிந்தவராக இருக்க வேண்டும் (ஓட்டுநர் உரிமம்)
- நற்சான்றிதழ் பெற்றவராக இருத்தல் வேண்டும்
- வாழ்ந்து காட்டுவோம் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மாநில அளவிலான திட்டங்களில் பணிபுரிந்து பணிநீக்கம் மற்றும் நிதி தொடர்புடைய குற்றங்களால் பணிநீக்கம் செய்யப்பட்டிருக்க கூடாது.
- தேர்வு குழு மூலம் தேர்வு செய்யப்படும் நபர்கள் 11 மாத ஒப்பந்த அடிப்படையில் சம்பந்தப்பட்ட வட்டார அளவிலான கூட்டமைப்பு மூலம் நியமனம் செய்யப்படுவர்.
- விண்ணப்பங்கள் 07.10.2026 முதல் 16.10.2026 அன்று மாலை 5 வரை சம்பந்தப்பட்ட வட்டார அளவிலான கூட்டமைப்பிற்கு ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விபரங்களுக்கு திட்ட இயக்குநர் / இணை இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,மாவட்ட ஆட்சியர் வளாகம் தென்காசி மாவட்டம் -627811 என்ற முகவரியை அணுகலாம் என மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு—செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தென்காசி**